**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| STC/CC.No. | - CC.No.142/2020 |
| Deposition of Witness for | - **DW - 2** |
| Name and Age | - Valarmathi (42) |
| Father / Husband Name | - Kannu @ Munusamy |
| Occupation | - Teacher |
| Village | - Namakkal |
| Taluk | - Namakkal |

**நாள்** – 27.03.2025

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**A1 Present, A2 to A4 are Absent. Section 355 of BNSS PF & A**

**DW – 2**

**முதல் விசாரணை**

நான் நாமக்கலில் குடியிருந்து தனியார்பள்ளி ஆசிரியராக பணிபுரிந்துவருகிறேன். என்னிடம் காட்டப்படும் டிஸ்ஜார்ஜ் சம்மரியானது தருமபுரி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்ட சமயத்தில் கொடுக்கப்பட்டதாகும். எ.சா.2–ன் டிஸ்ஜார்ஜ் சம்மரி **எ.ம.சா.ஆ.3** ஆகும். எனது இடது தோள்பட்டை, நெஞ்சு ஆகிய பகுதியில் காயம்பட்டு மூக்கில் இரத்தம் வந்தது. அத்துடன் எனது இடுப்பு பகுதியிலும் காயம் ஏற்பட்டது. கடந்த 25.05.2020–ம் தேதியில் எனது வீட்டிற்கு அருகில் காலை 11.00 மணியளவில் வஞ்சிகோவன் என்பவர் எனது தலைமுடியை இழுத்து, துப்பட்டாவை பிடித்து கிழித்து கீழே தள்ளிவிட்டார். எனது நெஞ்சில் மீது உதைத்தார். கிருஷ்ணன் என்பவர் தடியால் எனது இடது தோள்பட்டையில் அடித்தார். கிருஷ்ணன் என்பவர் அடித்ததில் எனக்கு மூக்கில் இரத்தம் வந்தது. அப்போது எனக்கு மூச்சுவிட சிரமமாகிவிட்டது. எனவே தான் தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்ந்தேன். அப்போது போலிசார் விசாரித்தார்கள்.

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

1. ஆஜர் எதிரி எனக்கு உடன்பிறந்த சகோதரி ஆவார். ஆஜர் எதிரி மற்றும் புகார்தாரரின் வீடும் எதிரெதிரே உள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் வீட்டு செடியானது எனது அக்கா வீடுவரை செடி வளர்ந்துவந்து பந்தல் போட்டபோது பிரச்சனை ஆரம்பம் ஆனது என்றால் சரியல்ல. எனது அக்கா வீட்டிற்கு பக்கத்திலுள்ள பொது தடத்தை உபயோகிப்பது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டது. எனது அக்கா கொடுத்த புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் பொதுதடத்தில் கிருஷ்ணன் காம்பவுண்ட் சுவர் கட்டியதால் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. குற்ற எண்.891/2020 மற்றும் குற்ற எண்.892/2020 ஆகிய இரண்டு முதல் தகவல் அறிக்கையிலும் சம்பவ தேதி 25.05.2020, சம்பவ நடந்த நேரம் 11.00, சம்பவ இடம் இரண்டு புகார்தாரர்களின் வீட்டிற்கு முன்பு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அக்கா கொடுத்த குற்ற எண்.892/2020 வழக்கு Mistake of Fact என்று முடிக்கப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால், தற்போது தான் தெரியும். நான் தாக்கல்செய்துள்ள எ.ம.சா.ஆ.3 ல் மருத்துவமனையில் அட்மிட் ஆன தேதி தான் உள்ளதே தவிர காயம் எப்போது ஏற்பட்டது என நான் மருத்துவரிடம் கூறிய விபரம் இல்லை என்றால் சரிதான்.

3. அதேபோல எ.ம.சா.ஆ.3ல் கண்ட விபரங்கள் மருத்துவத்துறை சம்மந்தமாக உள்ள நிலையில் அதனை குறித்து சம்மந்தப்பட்ட மருத்துவர் தான் சாட்சியமளிக்க தகுதிவாய்ந்த நபர் என்றால் சரியல்ல. சம்மந்தப்பட்ட மருத்துவரை விசாரித்தால்தான் எ.ம.சா.ஆ.3 ஆவணத்தின் உண்மை தன்மை பற்றி தெரியவரும் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கிருஷ்ணன் உள்ளிட்ட நபர்கள் தாக்கியதாகவும், அதனால் எனக்கு காயம் ஏற்பட்டதாகவும் கூறியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல. 1ம் எதிரி எனது உடன்பிறந்த சகோதரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/.J.Nagalakshmi @ Vijayarani
Judicial Magistrate(FAC),
Palacode.